**வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **தேனி** | காலம் : | **20/12/2023** | முதல் | **24/12/2023** |
| அறிக்கை எண் : | **101/ 2023** | வெளியீட்டு நாள் : | **19/12/2023** | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30° - 33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (14.12.2023 **முதல்** 18.12.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 24-12-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/12 | 15/12 | 16/12 | 17/12 | 18/12 | தேதி | நாள்-1 20/12 | நாள்-2 21/12 | நாள்-3 22/12 | நாள்-4 23/12 | நாள்-5 24/12 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.6 | 74.6 | மழை (மி.மீ) | 6 | 2 | 3 | 0 | 0 |
| 31 | 33 | 31 | 30 | 30 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 24 | 23 | 24 | 24 |
| 21 | 24 | 23 | 25 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 22 | 23 | 23 |
| 4 | 5 | 6 | 8 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 4 | 7 | 4 | 6 |
| 79 | 67 | 83 | 85 | 95 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 54 | 70 | 83 | 89 | 90 | | 80 | 70 | 60 | 50 | 70 |
| 15 | 14 | 8 | 8 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 6 | 6 | 6 | 8 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் டிசம்பர் 19 மற்றும் 22 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 23°-25° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தொடர்ந்து மேக மூட்டத்துடன் கூடிய ஈரப்பதமான வானிலை நிலவுவதால் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 10-15 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் ஒட்டும்பொறி அட்டைகளை வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தைகண்காணிக்கவும்

நெல் வயல் மற்றும் இதர விளைநிலங்களில் போதிய வடிகால் வசதியினை ஏற்ப்படுத்தவும்.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

**முக்கிய பயிர்கள் : வெண்டை, திராட்சை, கால்நடை.**

வெண்டை பயிரில் சாம்பல் நோயின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் காரணமாக வெண்டைப் பயிரின் இலையின் இரு புறமும் சாம்பல் கலந்த வெள்ளை நிறப் பொடி போன்ற வளர்ச்சி காணப்படும். இது இளம் தண்டு, மொட்டுகள், பூக்கள் மற்றும் இளம் காய்களையும் பாதிக்கிறது.

பாதிக்கப்பட்ட இலைகள் சிதைந்து, மஞ்சள் நிறமாக மாறி, சிறிய பச்சை நிற திட்டுகளுடன் காணப்படும் காய்கள் முதிர்வதற்கு முன்பே உதிர்ந்து விடும். இது மகசூலில் பாதிப்பை உண்டாக்கும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 25கிராம் நனையும் கந்தகம் அல்லது 10 லிட்டர் தண்ணீருக்கு 25 மில்லி என்ற அளவில் ஹெக்சாகொனோசோல் இவற்றில் ஏதேனும் ஒன்றை தெளிக்க வேண்டும்.

பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ள வேண்டும்.

**திராட்சை:**
தற்போது நிலவும் பருவச் சூழ்நிலை மற்றும் வெப்பநிலை குறைந்து காணப்படுவதால் திராட்சை பயிரில் சாம்பல் நோய் வரவ வாய்ப்புள்ளது. விவசாயிகள் தொடர்ந்து வயலை நன்கு கண்காணிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும் இதனைக் கட்டுப்படுத்த 0.3சத நனையும் கந்தகம் அல்லது கந்தகத்தூளை ஒரு எக்டருக்கு 6 முதல் 12 கிலோ என்ற அளவில் காலை நேரங்களில் தூவ வேண்டும்.

**கால்நடை:**
தற்போது நிலவி வரும் குளிர்ந்த வானிலையின் காரணமாக, கால்நடைகளை, சூரியன் உதித்து 2 மணி நேரம் கழித்து மேச்சலுக்கு அனுப்ப வேண்டும்,

மாட்டு கொட்டகைகளை சுற்றி கோணி சாக்கு பை கொண்டு மறைத்து கட்டவும்,

கொட்டகைகளை ஈரப்பதம் இல்லாதது நன்கு உலர்ந்து இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேலும் உலர்ந்த தீவனங்கள் அல்லது பசுந் தீவனங்கள் கொடுக்கும் போது ஈரப்பதம் இல்லாமல் கொடுக்க வேண்டும்.